செ.வெ.எண்: 79 நாள்:09.02.2018

# பத்திரிக்கை செய்தி

## தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்,
## திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் சமுதாயத்தில் பின்தங்கிய குழந்தைகளை உலக வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்காக **"Project Spark – Inspire & Ignite"** என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சமுதாயத்தில் பின்தங்கிய குழந்தைகள் மாவட்டத்தில் உயர் அதிகாரிகளுடன் ஒரு நாள் அலுவல்களில் கலந்து கொண்டு அவர்களை போல் தாங்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக 09.02.18-அன்று இக்குழந்தைகள் மாவட்ட கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப., அவர்கள் நடத்திய ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் அலுவல்களில் கலந்து கொண்டு காவல் துறை பற்றி தெரிந்து கொண்டனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுடன் குழந்தைகள் மதிய உணவு அருந்தினர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் குழந்தைகளுடன் உரையாடி காவல் துறை பற்றியும், இதர அரசு துறைகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள். மேலும் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் மதித்தால் மட்டுமே வாழ்க்கையில் சிறந்த இடத்தை அடைய முடியும் என்று அறிவுரை வழங்கினார்கள். இச்சிறுவயதில் தங்களுடைய எண்ணங்களை தூய்மையாகவும், ஒழுக்கமாகவும் வைத்து கொண்டால் வாழ்க்கையில் பல இன்னல்களிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று ஆலோசனை வழங்கியதுடன், அவர்களுக்கு பரிசுகள் தந்து பாராட்டினார்கள். இறுதியில் இக்குழந்தைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.